தொகுதி 9]

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

தாரண ௵ ஆனி ௴
JUNE 1944

"முயற்சி திருவினை யாக்கும்"

பொருளடக்கம்

பக்கம்

1. சிறந்த ஆசிரியரின் மனப்பான்மையும், வேலையில் சித்திபெறும் மார்க்கமும் 51
—A. K. டேவிட், B.A., L.T.

2. நமது யூனியன் 54
— V. C. காளியப்பன்.

3. செய்தித் திரட்டு 59

4. பத்திராதிபர் குறிப்புகள் 61

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

சந்தாதாரர்களுக்கு அறிக்கை

சந்தாதாரர்களுக்கு ஞாபகப்படுத்தும்பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதாரர்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. மூலம் சந்தா தொகை வசூலிக்கப்பட நேரிடும். வி. பி. அனுப்புவதில் பல கஷ்டங்கள் ஏற்படுவதால், சந்தாவை மணியார்டர் மூலம் அனுப்பிவிடும்படி நேயர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தவிர காகிதக் கஷ்டத்தினாலோ, அச்சாபீஸ் ஆள் கஷ்டத்தினாலோ, காலதாமதமேற்பட்டாலன்றி, ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 15-க்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1944 ஜூன் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 4, 44. செங்கற்பட்டு — Ch. 30, 34.
வடஆற்காடு — N. A. 1-A, 2, 15, 17, 22. 24, 27,49, 58.
தென்னாற்காடு — S. A. 19, 20, 27, 28.
தஞ்சாவூர் — Tan. 27-A, 32, 33, 43, 67, 91.
திருச்சி — Tri. 14, 29, 52.
ராமநாதபுரம் — Rd 3, 57, 58, 67.
மதுரை — Md. 27, 131.
திருநெல்வேலி — Tin. 12, 35, 45, 49.
சேலம் — S. 32, 50, 59. கோயமுத்தூர் — Co. 18-B, 49.

முக்கிய கவனிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபனிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். —பத்திராதிபர்.

DESCRIPTIVE GEOGRAPHY

FOR CLASSES IV & V

By N. SUBRAHMANYAM, M.A., L.T. F.R.G.S., & K. RAMAMOORTHY, M.A., L.T.

(Written in accordance with the recent Syllabus) **Tamil & Telugu Editions**

Price : IV Class 0 10 0 V Class 0 10 6

STORIES FROM INDIAN HISTORY

FOR CLASSES IV & V

By S. THIRUVENKATACHARI, M.A., L.T. **TAMIL**

Price IV Class 0 6 6 V Class 0 8 0

A TEXT BOOK OF INDIAN HISTORY

(FOR MIDDLE SCHOOLS & HIGHER ELEMENTARY SCHOOLS)

By Rao Bahadur, C. S. SRINIVASACHARI, M.A.,

TAMIL & TELUGU EDITIONS

Price : Book I As. 8, Book II As 11 Book III As. 11

P. VARADACHARY & Co.

Publishers & Book-Sellers, LINGHI CHETTY ST., MADRAS

பாலர் நேசன்

தொகுதி 9	1944 ஞூ ஜூன் மீ தாரண ஞூ ஆனி மீ	பகுதி 3

சிறந்த ஆசிரியரின் மனப்பான்மையும், வேலையில் சித்திபெறும் மார்க்கமும்

A. K. David, B.A., L.T.
Deputy Inspector of Schools, Arni Range.

சிறந்தகல்வியின் முக்கிய நிபந்தனை யாதெனில், போதிக்கும் ஆசிரியர் தமது வேலையைப் பற்றிக்கொண்டிருக்கும் சரியான நோக்கமும், தகுந்த மனப்பான்மையுமேயாகும். ஆகவே ஆசிரியர், தம்தொழிலின் முக்யத்துவத்தை மனதிற்கொண்டு, சூழ்நிலையின் பயனாய் ஏற்படக்கூடிய தோல்வி மனப்பான்மையைக் களைந்து, நேர்மையான மனப்பான்மையுடன் தமது அன்றாடக் கடமைகளை காலத்திற்கேற்ப திறமையுடன் நடத்திவர, அறிந்துகொள்ள வேண்டிய விஷயங்களாவன:

முதலில், ஆசிரியர் பிள்ளையின் தன்மையை நன்கறிந்து, சிறுவர்களிடத்தில் அனுதாபம் காட்டும் தன்மையுடையவரா யிருத்தல் வேண்டும். ஏனெனில் போதனையின் முக்கிய அம்சம், ஆசிரியரது மனம், பிள்ளையினது மனதைத்தட்டி யெழுப்பிவிடச் செய்தல். ஆசிரியரது மனமும், பிள்ளையினுடைய மனமும் ஒன்றுபட்டாலன்றி, போதனையில் பயனில்லை. ஆகவே கல்வியறிவைப் பெற்றுக்கொள்ள, ஆசிரியர் குழந்தைகளைப் பங்காளிகளாகக் கருதவேண்டும்.

உலகில் மனிதனுடைய முயற்சியில் சிறந்தது, அவனது சுயேச்சையின் எழுப்புதலினால் உண்டாகும் செயல்களேயாகும். ஆசிரியர் இத் தத்துவத்தை நன்கறிந்தால், அவர் தன்னுடைய சிறந்த கல்வித்திறமையினால், அல்லது சாமர்த்தியமான போதனா முறையினால் மட்டுமன்றி, பிள்ளையின் இயற்கை செயல்களை வெளிப்படுத்துவதில் எவ்வளவு தூரம் சித்தி பெறுகிறாரோ, அதுவே சிறந்ததெனக் கண்டுபிடித்துக்கொள்ளத் தவறமாட்டார்.

ஆசிரியர், பாடசாலையைப் பிற்கால வாழ்க்கையின் கோட்பாடுகள் ஒழுங்குபடுத்தப்பட்டு, ஒருங்கே அமையப்பெறுமோர் ஸ்தலமெனக் கருதவேண்டும். ஆரம்பப் பாடசாலை ஆசிரியரின் வேலையாதெ

ளில், பிள்ளையைப் பிற்கால வாழ்க்கைக்கென்று ஆயத்தம்செய்தல். இதை நன்கறிந்துணரும் ஆசிரியரே தமது வேலையைப்பற்றிய சரியான அபிப்பிராயமும், வேலையின் பொறுப்பையும், கடமைகளையும் அறிந்தவராவர். பாடசாலையில்தான், சிந்தனையையும், செயல்களையு மடுத்த பல பழக்கங்கள் உருவாகி, அவைகள் பிற்காலத்தில் தலைகாட்ட ஆரம்பிக்கும். ஆகவே ஆசிரியர் தற்காலத்திற் கென்றல்ல, வருங்காலத்திற்கென் றுழைக்கவேண்டியவரா யிருக்கிறார். பாடசாலைப் பருவந்தான் மனித இயற்கையின் ஆரம்பகாலம். இந்த ஏற்றபருவத்தில்தான், நல்ல முயற்சிகள், சிறந்த போதனையின் பயன்கள், தகுதியும் நிலைவரமுமான பயனைக் கொடுக்கக்கூடியதா யிருக்கின்றன.

சிறந்த ஆசிரியரொருவர், சிற்சில நல்ல குணாதிசயங்களும், பழக்க வழக்கங்களும் பிள்ளைகளிடத்தில் படியவேண்டுமென்ற திட்டவட்டமான நோக்கத்தோடு முயலவேண்டும். அம்முயற்சி பயன்படுவதற்கு, தம் போதனை யன்று, சாதனையே சிறந்ததெனக் கருத்திற்கொள்ளவேண்டும். நீதியை விளக்கும் கதைகளும், சன்மார்க்க போதனைகளும், நல்லமுது மொழிகளும், கற்பனைகளும், எழுப்புதலான வார்த்தைகளும் நன்மை விளைவிக்கக் கூடியவைகளே, எனினும் மேற்கூறியவைகள் ஆசிரியரது அன்றாடச் செயல்களின் மூலமாய் முரண்பட்டால், அவைகளினால் பயனொன்று மில்லை.

மேலும், ஒரு இந்திய பாடசாலை ஆசிரியராக, அவருக்கு ஏனையோரைவிட தமது தேசத்திற்காக உழைக்கக்கூடிய அரிய சந்தர்ப்பமொன்று கிடைத்திருக்கிறதெனக் கருதவேண்டும். ஆனால் தற்கால ஆசிரியர்கள் தங்களது வேலைகளைப்பற்றியும், பொறுப்புகளைப் பற்றியுமோர் தாழ்வான அபிப்பிராய முடைத்தா யிருக்கின்றனர். அந்த அபிப்பிராயத்தையே இதரர்கொண்டு ஆசிரியர்களுடைய அந்தஸ்தையும், சம்பளவிகிதத்தையும் திட்டப்படுத்த ஏதுவாயிருக்கிறது. ஆசிரியர்களே தங்களது தொழிலின் முக்கியத்தையும், மேலான நோக்கங்களையும் நன்கு அறியாவிடில், இதரர் அதைப்பற்றியறிந்து ஆசிரியர்களுக்காக மேலான அபிப்பிராயத்துட னுழைக்கவேண்டு மெனக்கருதுவது தகுதியன்று. ஆசிரியர்கள் தெளிவாகவும், திட்டவட்டமாகவும், எத்தகையவர்களாய்த் தங்கள் மாணவர்கள் பிற்காலத்தில் திகழவேண்டுமென கருதவேண்டும். இத்தகைய திட்டவட்டமான நோக்கங்களையும், அதற்கான திறமையையும் பெறவே, போதனாமுறைப் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

ஆசிரியருக்கு தாம் உண்மையென்று கண்டறிந்த விஷயங்களை பாடசாலையிலும், கிராமத்திலும் கொண்டு செலுத்த சுய நம்பிக்கை யேற்பட வேண்டும். இவ்வித நம்பிக்கை அறிவின் பெருக்காலும், பயிற்சியின் மூலமாகவும் ஏற்படும். ஆனால் ஓர் சிறந்த ஆசிரியராக விளங்க, அறிவுக்கும் பயிற்சிக்கும் மேலாக குணாதிசயங்களமைய மனவுறுதி, முன்னேறுமவா, நேர்மை, முகமலர்ச்சி, தன்னலம் கருதாமை முதலிய குணங்கள் ஆசிரியரிடத்தில் காணப்படவேண்டும். இந்த குணங்களே ஒரு ஆசிரியரின் பழக்க வழக்கத்தைப் பொறுத்திருக்கிறது. ஆகையால் ஆசிரியர் ஒவ்வொருவரும், தங்களை நற்பழக்க வழக்கங்களில் பழக்கப்படுத்தி, குழந்தைகளிடத்தில் அவ்விதமாக நடந்துவருவது, அதிக போதனையைக் காட்டிலும், சிறந்த பயனை விளைவிக்குமென்பதற் கையமில்லை.

மாணவனுக்கு யோக்யதையுந் தத்துவமுமுண்டென்று அறிந்துகொள்ளும்படி செய்தலும், அவன் பெற்றுக்கொள்ளும் அறிவை தகுந்தவண்ணம் உபயோகிக்க ஒருசந்தர்ப்பமளித்து அவனைத் திடப்படச் செய்வதுமே பாடசாலையில் ஆசிரியரின் பிரதான நோக்கமாக வேண்டும்.

ஆசிரியர் தம் வேலையில் நிரந்தரமான பயனைப்பெறுவதற்கு பின்கண்ட முயற்சிகள் அத்யாவசியமாகும்.

1. தகுந்த ஆயத்தம். ஆயத்தமின்மை ஒன்றும் போதிக்காது, வீணான முயற்சியில் முடியும். இருவிதமான ஆயத்தம் ஆசிரியருக்குத் தேவை.

(a) குறிப்பான ஆயத்தம்:— ஒழுங்கான போதனை வருஷமுழுமையும் கொடுத்துவர, சிந்தனையுடன் வகுக்கப்பட்ட திட்டம் தயாரித்தல். திட்டவட்டமான போதனைக்கு அவசியமான போதனைக் குறிப்புத் தயாரித்தல். தினமும் வகுப்பறையில் செய்யப்போவதென்ன, எவ்விதம் செய்தல், எவ்வளவு போதித்தல், அதற்குவேண்டிய சாதனங்களவை யென நிர்ணயித்த லவசியம்.

(b) பொதுவான ஆயத்தம்:—ஆசிரியர் தமது அறிவைப் பெருக்கிக்கொள்ளும்படி முயலவேண்டும். தற்கால ஆசிரியர்களில் பலருக்கு இவ்வித பழக்கம் ஏற்படவில்லை. கல்வி சம்பந்தமான புத்தகங்களையும், பத்திரிகைகளையும் வாசித்து, தங்களுடைய அறிவைப் பெருக்கி காலத்திற்கேற்பப் புதுப்பித்துக்கொள்ளுதல் மிகவும் முக்கியம். டாக்டர் ஆர்னல்ட் என்னும் ஆங்கிலத் தலைமை யாசிரியர் பின்வருமாறு கூறுகிறார். "எந்த ஒரு மனுஷன் எவ்வளவு காலம் தினமும் கற்றுவருகிறானோ அவனே போதிப்பதற்குத் தகுதியானவனென நான் கருதுகிறேன்."

2. பாடசாலையில் கொடுக்கப்படும் எல்லாவித எழுத்து வேலையையும் நன்கு பரிசீலனைசெய்தல். தற்காலம் பாடசாலைகளில் காணப்படும் பரிதாபமான காட்சிக்கு ஆசிரியர்களுடைய கவனக்குறைவே காரணமெனலாம். கையெழுத்து, பிழையற எழுதுதல், ஒழுங்கின்றி எழுதல், போதிய இடமிட்டு எழுதாமை, முற்றுப்புள்ளியின்றி யெழுதுதல் முதலியன தினப்படி ஒவ்வொரு வேலையிலும் கவனித்து சீர்திருத்தப்படவேண்டும். நாளுக்கு நாள் பிள்ளைகளின் எழுத்துவேலை மேம்பாடடைந்து வரவேண்டுமென்கிற நோக்கத்தை ஆசிரியருடைத்தா யிருக்கவேண்டும்.

3. நன்கு நிர்ணயிக்கப்படாத, கவனமின்மையான, நிதானமற்ற வகுப்பு மாற்றுதல் ஒரு பாடசாலையின் அபிவிருத்திக்குப் பங்கம் விளைவிக்கும். தகுதியற்றவர்களை மேல் வகுப்புக்கு மாற்றுதல் ஒரு வகுப்பிலுள்ள இதர பிள்ளைகளின் தேர்ச்சியையும் மட்டுப்படுத்த ஏதுவாகும்.

4. ஆசிரியர் ஒரு அமைதியான, பயனை விளைவிக்கக்கூடிய, உறுதியான மனவேகமும், பொருத்தமான தோற்றமுமுடையவரா யிருத்தலவசியம். அவர், தீர ஆலோசித்து, தாம் பிள்ளைகளுக்குக் கொடுக்கும் கட்டளைகளைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும், திருப்பித் திருப்பிக் கூறுவண்ணமு மிருந்துவந்தால் வகுப்பில் தற்பொழுது காணப்படும் குழப்பங்களும், ஒழுங்கின்மையும், வீணான காலவிரயமு மேற்படாது. போதனையின் பயன் சிறந்து விளங்கி வேலையில் வெற்றி நிச்சயம் உண்டாகும்.

நமது யூனியன்

V. C. Kaliappan
President, Panchayat Board Teachers' Union, Tiruvannamalai

கல்வி சம்மந்தமான விஷயங்களையும், துரைத்தனத்தார் அவ்வப்போது வெளியிடும் உத்தரவுகளையும் அறிந்து கொள்ள, ஆசிரியர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட கூட்டம் ஒன்று மாதம் ஒருமுறைநடைபெற்று வருகின்றது. ஆனால் இக்கூட்டங்களில் ஆசிரியர்கள் தங்கள் தொழில் சம்மந்தமாகவும் வாழ்க்கை சம்மந்தமாகவும் ஏற்படும் குறைகளை விவாதித்து காலதாமதம் செய்கிறார்களென்று தனியாக G.O. MS. No. 416—24-2-193 உத்திரவின் பிரகாரம் யூனியன் அமைத்துக்கொள்ள கல்வி இலாகா டைரக்டர் அவர்கள் அனுமதித்திருக்கிறார்.

பாடசாலைகளில் மாணவர்களிடையே சகல மதஸ்தர்களிடமும் அதாவது ஜாதி-மதம்-வம்சம்-வர்ணம் முதலிய வேற்றுமைகளால் பாதிக்கப்படாமல் எல்லோருக்கும் பொதுவாயுள்ள சகோதர பாவத்தை விருத்தி செய்யக்கூடிய ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் ஒற்றுமைச் சங்கங்களில் சேர்ந்து ஒற்றுமையாய்க் குறைகளைத் தெரிவித்துக் கொள்ளவேண்டிய அவசியம்.

"எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்; (Union is strength). ஒற்றுமை உயர்வைத்தரும். ஐக்கியமே பலம். சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை'' என்பதின் பலாபலன்களை ஆசிரியர்களாகிய நாம் பார்த்திருந்தும் கேட்டிருந்தும் பிறர்க்கெடுத்துரைத்தும், அதன் மூலம் நன்மைகளைப் பெற விருப்பங்கொள்ளாதிருப்பதும், தனது வேலையைத் தானே அலட்சியம் செய்துகொள்வதும் வருந்தத்தக்க விஷயங்களாகும். அற்பமான வேலையென்று அசட்டை பண்ணுவது அடாத காரியம். பாவம் ஒன்று தவிர பரமன்முன் அருவருக்கத்தக்கது வேறொன்றுமில்லை. ஆகவே யோக்கியமாகச் செய்யும் ஒவ்வொரு வேலையும் உயர்ந்ததே. யோக்கியமாகச் செய்யும் தொழிலில் வெட்கமானது ஒன்றுமில்லை.

முயற்சி திருவினை யாக்கும்-முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார் முயன்றால் முடியாத தொன்றில்லை-வருந்தினால் வாராத தொன்றில்லை-பாடில்லாமல் பலனில்லை-மெல்ல மெல்லப் பாயுந்தண்ணீர் கல்லும் உருகப்பாயும்-ஊக்கமது கைவிடேல் என்பவைகளை அறிந்தவர்களும் பிறர்க் குரைப்பதற் கிணங்கியவர்களும் ஆகிய நாம் சங்கங்களுக்கு ஆஜராகாதிருப்பது நமமையே நாம் தாழ்த்திக் கொள்வதாக ஏற்படுகிறது.

"உன்னை உயர்த்த உன்னால்தான் முடியும்'' (Raise yourself by your best effort) என்ற கீதா போதனையை நன்கறிந்த நாம் ஒவ்வொருவரும் கல்விச் சங்கங்களாயிருந்தாலும், ஒற்றுமைச் சங்கங்களாயிருந்தாலும் அதில் பிரசன்னமாயிருப்பது நம் கடமையாகும். மாதம் ஒருமுறை கூடும் கல்விக்கழகங்கள் (Teachers' Associations) நடைபெறும் தினத்தன்று ஏதாவதொரு சொந்தவேலையை ஏற்படுத்திக்கொண்டு (அசந்தர்ப்பமாய் ஏற்படுவது தவிர) ஆஜராகாதிருப்பதானது தான் மேல் உத்திரவினால் பாதிக்கப்படுவதும் தவிர தன்னைச் சேர்ந்த ஆசிரியர்கள் என்ற பெயருக்கும் அகௌரவம் ஏற்படுத்தக் காரணமாய் விளங்குகின்றது.

கிராமங்கள் நிறைந்த நமது நாட்டில் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகம். ஆசிரியர்களாகிய நாம் பெரும்பாலும் கிராமங்களில் தான் வேலைசெய்து வருகிறோம். நமது ராஜதானியை எடுத்துக்கொண்டால்

சுமார் 50,000 ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் நடைபெற்று வருகின்றன. துரைத்தனத்தாரின் நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்று வேலை செய்துவரும் உத்தியோகஸ்தர்களில் ஆரம்பாசிரியர்களின் எண்ணிக்கையே அதிகம். இதிலிருந்தே யாருக்குப் பொறுப்பு அதிகமென்பதையும் நன்கறிந்து கொள்ளலாம். இதை முன்னிட்டே நமது காருண்ய கவர்மெண்டார், பெருந்தொகை கொண்ட ஆசிரியர்கள் தங்களுடைய வாழ்க்கையிலும் தொழிலிலும் ஏற்படும் குறைகளைத் தாமே தனித்தனி கவனித்துத் தீர்த்துக்கொள்ள இயலாதென்று யூனியன் ஒன்று ஏற்படுத்தி அதன் மூலம் குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி பெறலாம் என்னும் யூனியன்களை ஜில்லா சங்கத்துடன் (District Teachers' Guild) இணைத்துக்கொள்ளலாமென்றும் அனுமதித்திருக்கிறார்கள்.

ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமா (One flower makes no garland). மனம் உண்டானால் வழியுண்டு. (Where there is a will there is a way) அழுத பிள்ளை தான் பால் குடிக்கும். (A crying child will get milk) ஆகையால் ஒவ்வொரு தாலூக்கா ஆசிரியர்களும், ஏற்கனவே குறைகளுக்கு நிவர்த்தி கிடைக்கவில்லையே யென்று தோல்வி மனப்பான்மை கொண்டு கலைக்கப்பட்ட யூனியன்களைக் கூட்டி மறுபடி அமைப்பதுடன் இல்லாத இடங்களில் புதிய யூனியன்களையும் ஏற்படுத்தி ஜில்லா சங்கங்களுடன் இணைத்து குறைகளைக் குறைத்து தகுந்த பலனை அனுபவிப்பதோடு தென்னிந்திய ஆசிரியர் சங்கத்திற்கும் ஐக்கிய பலத்தை அதிகப்படுத்துவீர்கள் என்றும் நம்புகிறேன்.

நமது தாய் நாடு

ஆலயத்தைச் சுற்றி அங்கப் பிரதக்ஷணம் செய்யும் பக்தர் போன்று ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகள் பாரதத் தாயின் உச்சிமுதல் உள்ளங்கால் வரையில் அலைந்து திரிந்தார். அன்னையின் உடலிலும் உறுப்புக்களிலும் எங்கெங்கு என்ன கோளாறு உள்ளது என்று கண்டு கண்ணீர் உகுத்தார். பின்னர் அன்னையின் சோர்வை நீக்கி அவள் வலிமைபெற்று எழும்படி ஆசீர்வதித்தார். இந்த ஆசி மணிமொழிகள் நிறைந்தது இந்நூல்.

இரண்டாம் பதிப்பு. அழகிய வடிவுடன் வெளியிடப்பட்டுள்ளது.

விலை ரூ. 1—0—0

★

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,

மயிலாப்பூர் : : சென்னை

கற்றலின் இயல்பும் வளரும் விதமும்

G. V. Natarajan

இவ்வுலகில் இறைவனால் படைக்கப்பட்ட எல்லா உயிர் வகைகளி லும், மானிட வர்க்கமே சிறந்த முறையில் செவ்வனே கற்கக்கூடும். கற்கப்படும் பொருள்களை எளிதிலும், நுட்பமாகவும் மனிதனே கற்றுக் கொள்கிறான். அதற்குக் காரணம் யாதெனில் அம்மனிதனுக்குக் கற்ப தற்குச் சிறந்த கருவியான நல்ல மூளையும், அதைச்சேர்ந்த நரம்புத் தொ குதியும் கற்றற்கு ஏற்ற பிறவிக்குணங்களும் கொடுக்கப் பட்டிருக்கின் றன. இயற்கையில் அமைந்துள்ள அறிவை செயற்கையாகிய கல்வியி னால் பலவிதங்களில் சீர்த்திருத்திக் கொண்டு முன்னேற்றத்திற்கு வேண் டிய ஒழுங்குவகைகளைத் தேடிக்கொள்ளும் ஆற்றல் உள்ளவனாய் மனி தன் இருக்கின்றான். கல்வி என்பது நம்முள் புதிதாக இல்லாத ஒரு வஸ்துவைப் புகுத்துவது அன்று. இயல்பாக நம்முள் உள்ள இயல்பு ஊக் கங்களும் (Instinct) அவற்றால் விளையும் துலங்கள்களையும் (Respon-e) கல்வியினால் புதிதாக நம் வாழ்க்கையில் வந்து சேருகின்ற விஷயங்களோ டும், சந்தர்ப்பங்களோடும் பொருத்திக் கொள்ளப்படுவதே கற்றல் ஆகும். எனவே பிறவிக் குணங்களும், இயல் பூக்கங்களுமே கற்றலுக்கு அடிப் படை எனலாம். சுருங்கக்கூறின் கற்றல் இயற்கைத் துணைக்கருவிகளைக் கொண்டு கட்டப்படுகிற ஒரு மேல் கட்டிடமே ஆகும். இசை, பேசுதல் முதலியவைகள் பிறவி ஊக்கங்களிலிருந்து கற்கப்பட்ட துலங்களே யா கும். காற்றுப் பைகளில் உள்ள காற்றினால் காற்று நாண்கள் (Local cards) அசைந்து ஏற்படும் குரலே ஓசை ஆகிறது. இப்பிறவித் துலங் கள் பலமாறுதல்கள் அடைந்து இசையாக மாறுகிறது.

கற்றலில் நாம் பக்குவமடைதல் (Maturity) இயக்கம் (Activity) என்ற இருபகுதிகளைக் காண்கிறோம். மாணவனின் பேசும் உறுப்புக்கள் பக்குவ மடையாவிட்டால் பேசுதலில் நாம் அவனை இயக்கமுடியாது. பக் குவம் அடைந்துவிட்டால் இயக்கத்தை நாம் பழக்கத்தினாலும் திரும்பத் திரும்ப செய்வதாலும் கற்பிக்கலாம். பக்குவம் அடைதலே பயிற்றல் தொடங்குவதற்கு ஆரம்பமும் ஆகும். கற்பிக்கப்படும் மாணவனை நாம் கல்வியில் இயக்கும்போது அவனுக்கு அதில் விரும்பத்தக்க நோக்கம் இருக்கவேண்டும். ஒரு சிறந்த நோக்கம் கற்றலுக்கு அடிப்படையாக இருக்கவேண்டும். அதுவும் தெளிவானதாய் இருக்கவேண்டும். அதில் வெற்றியோ, தோல்வியோ அடைந்தால் அதுவும் கற்றலைத் தூண்டும் கருவியாக அமையும். தட்டுத்தடுமாறித் தகுந்ததை அறியும் (Learning through trial and error) முறையே கற்றலின் இயல்பான முறை என் பர். இவ்வழியிலேயே குழந்தைகளும், விலங்குகளும் கற்கின்றனர் என் பர். நாகரீக வளர்ச்சியிலும், இம்முறை வேலைசெய்கிறது (Laboratary method) என்று சொல்லப்படும் ஆய்ந்து அறியும் முறை இம்முறையே ஆகும். ஆனால் இது மெதுவாகச் செல்லுகிறது. காலச்செலவும் அதிக மாகிறது. உற்று நோக்கியும் பிறர் செய்வதைப்பார்த்து (Learning by

observation and imitation) பின்பற்றியும் கற்கும் நிலையும் கல்வியில் உண்டு. மாணவன் தானாகச்செய்து கற்கினும் உற்று நோக்காது கற்றால் பயன் இல்லை. அக்கல்வியின் பயனை வேறு சந்தர்ப்பங்களோடு பொருத்தவும் முடியாது. பிறரைப்பார்த்துச் செய்தல் குழந்தைகளிடத்தில் முதலில் இயல்பாய் பயன் கருதியில்லாமல் அமைந்திருப்பினும் பின்னால் வேண்டும் என்றே பயன்கருதி அவர்கள் பிறரைப்பார்த்துச் செய்வதில் முனைந்து நிற்கிறார்கள். கல்வியில் இது மிகவும் முக்கியமான அம்சமாகும். இவற்றைவிட முக்கியமானதும் சிறந்ததுமான இயல்பு சிந்திக்கும் அல்லது அனுமானிக்கும் (Learning by thinking or reasoning) ஆற்றலினால் கற்பதாகும். இது உற்றுநோக்கிக் கற்பதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பொதுவான எண்ணங்களையும் அனுமானம் வேண்டுகிறது. ஆனால் அதோடு நில்லாமல் நாம் மிகவும் கவனத்தோடு வார்த்தைகளின் அல்லது கருத்துக்களின் பொருள்களையும் அவற்றின் தொடர்பையும் ஒன்றுபடுத்திப் பார்த்து அறிந்து கற்றலைச் செய்கிறோம்.

•

கற்றலைப்பற்றி சிலவிதிகள் (Laws of learning) விரைவாகவும், பயன் உடையதாயும் கற்றலுக்கு ஏற்ற அல்லது துணை செய்யக்கூடிய சில சந்தர்ப்பங்களை விளக்குவனவாய் இருக்கின்றன. அவற்றில் முதலாவதாகக் கருதுவது காரியசித்தி விதியைக்கூறலாம். உலகத்தில் தோன்றிய மக்களும், மாக்களும் தங்களுக்கு விருப்பம் தரக்கூடிய காரியங்களையே சித்தியுடன் எப்பொழுதும் செய்து சந்தோஷப்படுகிறார்கள். எந்தக் காரியம் மனதிற்குச் சஞ்சலம் கொடுக்கிறதோ அதை மானிடசமூகம் பொதுவில் வெறுத்துத்தள்ளி, மீண்டும் அதைச்செய்யத் தூண்டப்படுவதில்லை. உதாரணமாகப் பள்ளிக்கூடங்களில் பொதுவில் பரிசுகொடுத்து ஆசைகாட்டுவதையும், தண்டனை அடைவதையும், பலவிதக் கட்டாய முறைகளையும், பலதடவை திருத்தி எழுதுதல் முதலியவற்றைத் தக்கபடி அறிந்தே மேற்கொள்ளவேண்டும். ஆதலினாலே உணர்ச்சி கற்றலில் மிகவும் பங்கெடுத்துக் கொள்கிறது. கல்வி முறையிலும், வகுப்புகளிலும் வெறுப்பைத் தரத்தக்கவை காரியசித்தியைக் கெடுக்கலாம். ஆதலால் அவற்றை நீக்குவதுடன் மேற்கொள்ளவும் கூடாது.

அப்பியாசவிதி (The law of use or exercise) எதை அப்பியாசம் செய்துகொண்டு வருகிறோமோ அதைக் கற்றுக் கொள்ளுகிறோம். எதைப்பயிற்சி செய்யாமல் விடுகிறோமோ, அதைக் கற்பதில்லை. ஒருவன் பாடுபட்டு எதைக் கற்கவேண்டுமென்று பழகுகிறானோ அது அவன் மனதில் நன்றாய்ப்பதியும். இவ்விதமாகப் பயிற்சிசெய்வதிலும் வெறும் பழக்கம் மட்டும் போதாது. அப்பழக்கம் செய்துகொள்ளுகிற விஷயத்தில் விருப்பமும் வேண்டும். காரியசித்தி விதி அப்பியாசவிதிக்கு நம்மைக் கொண்டுவந்து விடுகிறது.

பள்ளிக்கூடத்தில் பெருக்கல் வாய்ப்பாட்டை மாணவர்களைக் கொண்டு பழகும்படிச் செய்யும்போது அவர்கள் அதில் உள்ளபடியே குருட்டுப்பாடம் ஒப்புவிக்கும்படி விடக்கூடாது. அது என்ன என்று உணர்ந்து அதே விருப்பத்தோடு பழகும்படியான விதத்தைக் கையாள வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு ஒரு காரியத்தில் விருப்பத்தை மாணவனுக்கு உண்டுபண்ணுகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு அவன் அதைச்

செய்ய முன் வருவான். இதுவே இவ்விதியின் அடிப்படையான அம்சமாகும். வகுப்புகளில் திரும்பத் திரும்பக் கூறுதலும், பயிற்சிசெய்தலும் முதலியவை எல்லாம் இவ்விதிபெற்றுத் தோன்றியனவே.

ஆயத்தவிதி (The law of readiness) —ஒரு காரியத்தை நாம்செய்ய ஆயத்தமாய் இருக்கும்போது அதைச் செய்யும்பொழுது ஓர்வித மகிழ்ச்சியும், அதைச் செய்யாமல் இருக்கும்போது மனச் சஞ்சலத்தையும் நாம் அடைகிறோம். இதனை எதிர்மறையில் பார்க்கும்போது ஒரு காரியத்தைச் செய்ய தயாராய் இல்லாமல் இருக்கும்போது அதைச் செய்யும்படி கட்டாயப்படுத்துதல் வெறுப்பையும், மனத் துயரத்தையும் தரும். இவ்விதியைஆசிரியர்கள் நன்றாய்க் கவனித்து கற்பிப்பதில் மேற்கொள்ள வேண்டும்.

பிள்ளைகள் கேள்விகள் கேட்கும்போது அவற்றிற்கு தகுதியான விடைகளை ஆசிரியர்கள் வெறுப்பின்றியும், முகம் கோணாமலும், சரிவர பதில் அளிக்கவேண்டும். மாணவர்கள் சிலவற்றைக் கற்பது இன்றியமையாதது என்று ஆசிரியர்களோ, பாடத்திட்டமோ கூறினால் உடனே அதை மாணவர்கள் மீது சுமத்தாமல், மாணவரும் அதன் அவசியத்தை உணரும்படி ஆயத்தப்படுத்த வேண்டும். மாணவர்களின் ஆயத்தம் உள்ள மனதே கற்பதற்கு அனுகூலமாயுள்ள முதல்படியாம். எவ்விதமாய் அவர்களது ஆவலைத் தூண்டவேண்டுமென்று அறிந்தே ஆசிரியர்கள் கற்பிக்கவேண்டும்.

பழக்கத் தடைவிதி (The law of inhibition by habit) சில தூண்டுதல்களினால் உண்டாகக்கூடிய நிலைகள்கள் முதல் முதலில் எதனால் தூண்டப்பட்டனவோ அதனோடு தொடர்புடையனவாய் அமைகின்றன. முதல் முதல் தூண்டப்பட்ட அப்பொருள் மாணவர்களின் மனதில் பதிந்திருக்கலாம். அப்பொருள் மாணவர்களின் விருப்பத்திற்கோ அல்லது வெறுப்புக்கோ காரணமாய் பொருந்தியிருந்தால், கற்பதில் அது அதற்கேற்றபடி விருப்பையோ, வெறுப்பையோ உண்டாக்கலாம். ஆதலினாலே இவ்விரண்டும் நில்லாத ஒரு நடு நிலையான எண்ணம் இருக்கும்படி ஆசிரியர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும் முதல் முதல் கற்றலிலும், கற்றலைப்பற்றியும் படிகின்ற எண்ணங்கள் நேர்மையானவையாகவும், உண்மை உள்ளனவாகவும் இருக்கவேண்டும். சில இயல்பூக்கங்கள் ஒரு குறித்தவயதில் மலர்ச்சி அடைந்து பின் மறைந்துவிடலாம். குழந்தையின் வளர்ச்சியில் தனிப்பட்ட விருப்பங்கள் குழந்தைதோறும் மாறலாம். எச்சமயத்தில் குழந்தைகளுக்கு விருப்பம் ஏற்படுகின்றதோ அதை ஆசிரியர் கண்டறிந்து ஏற்றசமயத்தில் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால், பிறகு கற்றலில் அவைகளை மீண்டும் நாம் திருப்பிக்கொண்டு வரமுடியாது. ஆதலால் கற்றலில் குழந்தைக்கு ஒவ்வொரு பாடத்திலும் கவர்ச்சி ஏற்படுகிற சமயம் பார்த்து அது நீங்குவதற்கு முன்னமேயே நாம் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

செய்தித் திரட்டு

R. C. பாடசாலை, வேலங்தாங்கல்

18—6—44-ல், பெற்றோர் சங்க ஆண்டு விழா Rev. Fr, அந்தோணி சாமியார் தலைமையில் கொண்டாடப்பட்டது. மாணவர்களால் 'இரண்டு பாலியவீரர்கள்' என்ற நாடகம், 'ராமாபுரத்து ரங்கன், தர்மம் தலைகாக்கும், உப்பிலே சூக்ஷ்மம், தமையனைத் தள்ளி தம்பி மணியம் செய்தவிந்தை' முதலியன பற்றி சம்பாஷணைகளும் நடைபெற்றன. இடையில் கத்தாழம்பட்டு பஞ்சாயத்து பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீ காளியப்ப செட்டியார் 'கல்வியும் பெற்றோர் கடமையும்' என்பது பற்றி விரிவாகப் பேசினார். தலைவர் 'தற்கால உலகத்தில் கல்வியே மிகப் பிரதானம்' என்பதைத் தெளிவாக விளக்கிக் காட்டினார்.

எய்டெட் எலிமெண்டரி பாடசாலை, சூளேஸ்வரன்பட்டி.

31—5—44-ல், பெற்றோர் சங்க ஆண்டு விழா, டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ராமனுதய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது. ஸ்ரீ வெங்கட்டராவும், ஸ்ரீ வெங்கட சுப்பு பிள்ளையும் சொற்பொழிவு செய்தனர். மாணவ மாணவிகள் கும்மி கோலாட்டம் முதலியவைகளால் எல்லாரையும் மகிழ்வித்தனர்.

ஆரம்ப ஆசிரியர் சங்கம், சிவகங்கை.

17—6—44-ல். ஆண்டு விழா, வக்கீல் ஸ்ரீ குருசாமி அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ பால சேதிரம் அய்யர் ராஜாஸ் ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ சோமசுந்தரம் பிள்ளை, எலிமெண்டரி ஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ ரங்கசாமி அய்யரும், 'ஆரம்பக் கல்வியின் அவசியம் பெற்றோர்களின் கடமை, ஆசிரியர்களின் நன்மை' என்பனபற்றி சொற்பொழிவு செய்தனர். ஆசிரியர்களால் 'உண்மைக் காதல்' என்னும் நாடகம் நடிக்கப்பட்டது,

சொக்கலிங்க வித்யாசாலை, லட்சுமீபுரம்.

21—6—44-ல், மாதக் கூட்டம், திரு: ராமானுஜம் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தலைவர் 'அப்பூதி அடிகளும் அப்பரும்' என்பதுபற்றிச் சொற்பொழிவு செய்தார்.

26—6—44 ல் மாணிக்கவாசகர் விழா ஆரம்பமாயிற்று, மாணவர்கள் திருவாசகத்தை ஓதினார்கள். ஆசிரியர்கள், திரு. இராமானுஜம் பிள்ளையும், திரு. சுப்பையாவும். மாணிக்கவாசகர் சரித்திரத்தைப்பற்றிப் பேசினார்கள்.

போர்டு பெண் பாடசாலை, மல்லூர்.

29—4—44-ல், பெற்றோர் சங்க ஆண்டு விழா, பெண் பாடசாலைப் இன்ஸ்பெக்ட்ரஸ் ஸ்ரீமதி பவானி நாராயண பிள்ளை தலைமையில்

கொண்டாடப்பட்டது. டாக்டர் மிஸ் ராஜம்மாள் 'பெண் கல்வி' என்பதுபற்றிச் சொற்பொழிவு செய்தார். மாணவிகள் ஆடல்பாடல்களை வெகு திறமையாய் நடித்தனர்: ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ நடேச கவுண்டர் பரிசுகள் வழங்கினார்.

நகராண்மைக் கழகத்துவக்கப்பள்ளி ஆசிரியர் சங்கம், மாயவரம்.

10—6—44-ல், பொதுக்கூட்டம், சேந்தங்குடி முனிசிபல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ வைத்தினாதசுவாமி அய்யர் தலைமையில் நடைபெற்று நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (ஜில்லா முனிசிபல் ஆரம்ப ஆசிரியர் யூனியன் ஒன்று நிறுவி அதன்மூலம் நம் குறைகளை நிவர்த்தித்துக் கொள்வது சுலபமெனப் படுகிறது. இது விஷயமாய் மற்ற சங்கக் காரியதரிசிகள் தங்கள் அபிப்பிராயங்களை மேற்படி சங்க காரியதரிசிக்குத் தெரிவிக்கவும்.)

செல்லம் முதல்தர ஆரம்பப்பள்ளி, உரத்தூர்.

2—6—44-ல், இப் பாடசாலையின் வெள்ளிவிழா, தஞ்சை ஜில்லா கல்வியதிகாரி ஸ்ரீ பட்டாபிராம சாஸ்திரிகள் தலைமையில் கொண்டாடப்பட்டது. தமிழாசிரியர், சம்பந்தம் தலைவருக்கு வாழ்த்துப்பா படித்துக் கொடுத்தார். தலைமை ஆசிரியர் செல்லசாமி அய்யர் பாடசாலையின் அபிவிருத்தியைப் பற்றிய அச்சடித்த அறிக்கையைப் படித்தார். டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ துரைசாமி முதலியார் 'பள்ளியும் பழைய மாணவரும்' என்பது பற்றி உபந்நியசித்தார். மாணவ மாணவிகளால் கும்மி, கோலாட்டம் முதலியன நடைபெற்றன. தலைவர், பாடசாலையின் அபிவிருத்தியைப்பற்றிப் புகழ்ந்து பேசினார், இரவில் ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ நல்லமுத்து நாட்டார் தலைமையில், திருச்சி அட்வகேட் ஸ்ரீ வேதாசலம் 'தாழ்த்தப்பட்டவரின் தற்கால நிலை' என்பது பற்றிச் சொற்பொழிவு செய்தார்.

2—6—44-ல். இப்பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் முதல் ஆண்டு விழா, ஜில்லா லேபர் ஆபீஸர் ஸ்ரீ தாமஸ் பாக்கியம் தலைமையில் கொண்டாடப்பட்டது. தேசியப் போர் முனை உபந்நியாசகர் ஸ்ரீ வீராசாமி, இப் பாடசாலை மானேஜரும் தலைமை ஆசிரியருமான ஸ்ரீ செல்லசாமி அய்யரின் உருவப்படத்தைத் திறந்து வைத்து இவர் ஆதித்திராவிடர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டிருப்பதைப்பற்றி சிலாகித்துப் பேசினார். பின்பு திருச்சி ஸ்ரீ வேதாசலம் 'கல்வி வளர்ச்சியும் பொது மக்களும்' என்பது பற்றி விரிவாகப் பேசினார்.

ஆரம்ப பாடசாலை உபாத்திமைச் சங்கம், ஸ்ரீவைகுண்டம்

3—6—44-ல். சாதாரணக் கூட்டம், டிப்டி இன்ஸ்பெக்டர் தலைமையில் கூடிற்று. புது நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர் 'பாசியப் போர்முனை எதிர்ப்பு' என்பது பற்றி உபந்நியசித்தார்.

பத்திராதிபர் குறிப்புகள்

கல்வியும், காகிதக் கட்டுப்பாடும்

ஜுன்மீ 12வ பிறப்பிக்கப்பட்ட காகிதக் கட்டுப்பாடு உத்திரவு கல்வியை மிகவும் பாதிக்கத் தக்கதாயுள்ளது. இவ் வுத்திரவின்படி புஸ்தக பிரசுரகர்த்தர்கள் பள்ளிக்கூடங்களில் உபயோகிக்க அனுமதிக்கப்பட்ட புஸ்தகங்களை பிரசுரிப்பதில் 1939-ஆம் ஆண்டில் எவ்வளவு அளவு காகிதம் உபயோகித்தார்களோ அதில் பாதி அளவுக்குமேல் உபயோகிக்கக் கூடாது. அதுபோல நோட் புக்கு தயாரிப்பவர்கள் 1943-ம் வருஷத்தில் அதற்காக எவ்வளவு காகிதம் உபயோகித்தார்களோ அதில் 30 சத வீதமே உபயோகிக்க வேண்டுமாம். காகிதக் கட்டுப்பாடு அவசியமென்று எல்லோரும் அங்கீகரிப்பார்கள். காகிதம் தயாரிப்பதில் கஷ்டமிருப்பதாலும் வெளிநாட்டிலிருந்து காகிதம் வராததினாலும் காகிதம் உபயோகிப்பதில் பெரும் சிக்கனம் ஏற்படுத்த வேண்டியதுதான். ஆனால், இக்காலக் கல்வி முறைக்கு காகிதம் மிகவும் அவசியமாய்விட்டது. பாடதிட்டங்களைக் கவனித்தால் பல புஸ்தகங்கள் வேண்டியிருக்கின்றன. மாணவர்களுக்கு பல விஷயங்களை அறிவிக்க வேண்டியிருக்கிறது. ஆசிரியர் சொல்வதைக் காதால் கேட்டு கவனம் வைத்துக்கொள்வது சாத்தியமாகாது. புஸ்தகங்களைப் படித்தே கற்கவேண்டியிருக்கிறது. பயிற்சிக்கும் விடைகள் எழுதுவது மாத்திரம் போதாது. பயிற்சிக் கேள்விகளின் விடைகளையும், மற்றும்பல குறிப்புகளையும்நோட்டு புஸ்தகங்களில் எழுதி வைத்து, பின்னர் படிக்கவேண்டியிருப்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

60-ம் பக்கத்தொடர்ச்சி.

உயர்தர ஆரம்ப பாடசாலை, கிடாரக்குளம்

15—6—44.ல் ஜில்லா கல்வி யதிகாரி ஸ்ரீ பால் அவர்கள் ஆறுவது வகுப்பைத் திறந்துவைத்தார். ஏராளமான பொதுமக்களும் பிரமுகர்களும வந்திருந்தனர். 'கல்வியின் அவசியம், பாடசாலையின் முன்னேற்றம், பெற்றோர் ஒத்துழைப்பு' என்பனபற்றிப் பலர் பேசினார்கள். தலைவர் இப்பாடசாலையின் முன்னேற்றத்தைப் பாராட்டியும், திருநெல்வேலி ஜில்லா கல்வியில் முன்னேறி வருவதற்கு மகிழ்ச்சி காட்டியும் பேசினார்.

ராணி R. சுப்பய்யர் எலிமெண்டரி பாடசாலை, கும்பகோணம்.

30-6-44-ல் பெற்றோர் சங்கக்கூட்டம் ஸ்ரீமான் ராணி P. கிருஷ்ணய்யர் தலைமையில் கூடிற்று. சுமார் 60 ஆண், பெண் பெற்றோர்கள் விஜயம் செய்திருந்தார்கள். மாணவிகளால் கும்மி, கோலாட்டம் நடத்தப்பட்டன. பிறகு டவுன் ஹைஸ்கூல் தமிழ் பண்டிதர் ஸ்ரீ ராஜகோபாலபிள்ளை 'கல்வியும் பெற்றோர் கடமையும்' என்பதைப் பற்றி உபன்யாஸம் செய்தார். பிறகு இப்பாடசாலையில் 8-வது வகுப்பு வரையில் வைக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

எனவே, பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு வேண்டிய அளவு புஸ்தகங்களும் நோட்டு புஸ்தகங்களும் தயாரிக்க உதவுவது துரைத்தனத்தாரின் முக்கிய கடமையாகும். இதில் சிக்கனம் செய்வது கல்விக்குத் தடை செய்வதாகும். இங்கிலாந்தில் கடும் சிக்கன முறைகள் கையாளப்படுவதென்று சொல்லுகிருர்கள். ஆனுல் அவ்வேற்பாட்டிலும் பளளிக்கூட மாணவர்களுக்குவேண்டிய பாட புத்தகங்களும் நோட்டு புஸ்தகங்களும் குறைக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

நமது ராஜதானியில் இவ்வாண்டில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1939-ம் ஆண்டில் கல்வி பயின்றவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் 40 சத வீதம் அதிகரித்துள்ளது. இப்படியிருக்க 1939-ல் உபயோகித்த அளவு காகிதத்தில் 50 சத வீதம் உபயோகிக்க வேண்டுமென்ருல் கல்வியின் அபிவிருத்திக்கு அது எவ்வளவு பெரும் தடையாகும் என்பது சொல்லாமலே விளங்கும். நம் நாடோ கல்வியில் மிகவும் தாழ்ந்த நிலையிலிருக்கின்றது. நாடு முன்னேற்றமடைவதிலும் கல்வி அபிவிருத்தியிலும் கவனம் கொண்ட நமது துரைத்தனத்தார் மாணவர்களுக்கான பாட புத்தகங்களும் நோட்டு புத்தகங்களும், வேண்டியவ்வளவு தயாரிப்பதற்கும், வீண் செலவாகாமலிருப்பதற்கான முறையில் இவ்வுத்திரவை சீக்கிரம் மாற்றும்படி கேட்டுக் கொள்கிருேம். கல்வி முக்கியமானது என்னும் மனப்பான்மை அதிகாரிகளுக்கு ஏற்படும் என்று நாம் நம்புகிருேம்.

தவக்கமும், காரணமும்

ஜூன்மீ 15உ வெளியிடவேண்டிய இவ்விதழ் இத்தனை நாள் தவக்கமடைந்ததற்குக் காரணம் சொல்லாமலே விளங்கும். காகிதம் கிடைப்பதின் கஷ்டம் ஒருபுற மிருக்க, மேலே சொன்ன காகிதக் கட்டுப்பாடு உத்திரவு இன்னொரு கஷ்டத்தை உண்டாக்கிவிட்டது. இவ்வுத்திரவின்படி அக்டோபர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையில் மாதாமாதம் சராசரி எத்தனை பக்கம் இருந்ததோ அதில் 30 சத வீதமே இனி ஒரு இதழில் இருக்கலாம். அக்கணக்குப்படி இவ்விதழில் 14 பக்கமே இருக்க வேண்டும். அதுவும் மேல் அட்டையைச் சேர்த்து! இக்கட்டுப்பாடு உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தினசரி பத்திரிகைகளில் வெளிவந்தது. ஆனுல் உத்திரவிலடங்கியுள்ள கட்டுப்பாடுகள் என்ன என்று அறியமுடியவில்லை. சட்டத்திற்கு எதிராக போகக்கூடாது என்ற கட்டுப்பாட்டினுல் தவக்கம் ஏற்பட்டது. காகிதக் கட்டுப்பாடு ஆபீஸருக்கு, நமது பாலர் கல்விக்கு சென்ற ஆண்டில் எத்தனை பக்கங்கள் அடங்கியிருந்ததோ அத்தனை பக்கங்களை இவ்வாண்டிலும் பிரசுரிக்க அனுமதி கேட்டுள்ளோம். அனுமதிப்பார்கள் என்று எதிர்பார்க்கிருேம். அனுமதி பெறும் வரையில் நமது பாலர்கல்வி மிகக் குறைவான பக்கங்களுடனே வெளிவரும்.

S. I. T. U PROTECTION FU...

520, High Road, Triplicane, Madra...

ஒவ்வொரு உபாத்தியாயரும் சேர வேண்டிய நிதி

தற்கால கையிருப்பு	...	...	ரூ. 2,90,000
பாலிஸிக்கள்	...	...	1,620
யூனிட்டுகள்	...	...	3,125

★

ரூபாய்க்கு 2 அணு விதம் போனஸ்

கொடுக்கப்பட்டிருக்கிறது

★

உடனே சேருங்கள்!

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.

வெங்கட்ராமா அண்டு கம்பெனி

பிரசுரகர்த்தர்கள் :: எஸ்பிளனேட், மதராஸ்

கீழ்க்கண்ட புத்தகங்கள் எல்லாம் சென்னை துரைத்தனத் தாரால் பாட புத்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டவை.

1. தமிழ் சுடர் வாசகம்.
   I முதல் VIII வகுப்பு வரை
   S. G. கணபதி அய்யர், B.O.L.,
   Miss M. மாசிலாமணி அம்மையார் M.A., L.T.
2. ஆரம்ப கணிதம்
   III முதல் V வகுப்பு வரை
   M. சோமசுந்தரம், B.A., L.T.
3. இயற்கைப் பாடமும், தோட்ட வேலையும்
   IV & V வகுப்புகளுக்கு
   S. V. தர்மராஜசிவா
4. இந்துதேச சரித்திரம்
   IV முதல் V வகுப்பு வரை
   P. சுப்பையா
5. இந்துதேச சரித்திரம்
   VI முதல் VIII வகுப்பு வரை
   D. வெங்கிடராமன்
6. பாலர் கை வேலை
   III முதல் V வகுப்பு வரை
   D. K. நந்திகேசுவரன்
7. தமிழ் மொழிப் பயிற்சிகள்
   III முதல் V வகுப்பு வரை.
8. தமிழ் நீதி கதா வாசகம்
   I முதல் V வகுப்பு வரை
   P. K. ஸ்ரீனிவாஸாசாரியார்
9. ஆரம்ப ஆசிரியர் உதவி புத்தகங்கள் I முதல் V வகுப்பு வரை
10. தமிழ்ச் சிறுவர் இலக்கணம்
   V வகுப்பு

இக் காகித பஞ்ச காலத்திலும் நாங்கள் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் தேவையான அளவுக்கு எல்லா புத்தகங்களையும் தயாரித்து வைத்திருக்கிறோம். தங்களுக்குத் தேவையான புத்தகங்களை சப்ளை செய்ய தயாராக இருக்கிறோம். சீசன் காலத்தில் ஆர்டர்கள் தாமதமாகாமலிருப்பதற்காக தங்களுடைய ஆர்டரை முன் கூட்டியே அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

வெடி குண்டுகள் விழுந்தால் நீங்கள் என்ன செய்ய விரும்புவீர்கள்? லண்டனில் பிரபல வைத்தியருள் ஒருத்தரான டாக்டர் அந்தோனி வேமௌத் சொல்வதை கேளுங்கள்: "வெடி குண்டுகள் வீசப்பட்ட இடங்களிலிருந்து தப்புவித்ததுமே, ஜனங்கள் முதலில் கேட்பது ஒரு கோப்பை தேநீர்தான். அது அவர்களுக்கு சந்தோஷம் தருவதுமன்றி, அவர்களுடைய பயத்தை போக்கி நன்னம்பிக்கையை ஊட்டவும் உதவுகிறது. ஆபத்திலிருந்து விடுவிக்கும் படையினர் அன்றொரு நாள் இடிந்து விழுந்த ஒரு வீட்டில் படிவழியே விரைந்தனர். ஒரு கிழவி, கூரை முழுதும் அநேகமாக மார்பிலே விழுந்து கிடக்கப் படுக்கையில் படுத்திருந்தாள். அவர்கள் அவளை விடுவித்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயினர். காயமடைந்த பகுதியில் அவள் 'ஸ்டிரெச்சரில்' கிடக்கும்போது, அவளுக்கு ஒரு கோப்பை தேநீர் கொடுத்தார்கள். அவள் அதை உறிஞ்சிய பிறகு முதல் தடவையாய் பேசினாள்."

ஒவ்வொரு போர் முனையிலிருந்தும்—எந்தெந்த இடத்தில் மனுஷ்யனின் தைரியம், பொறுமை இவைகளின் விசேஷத்தன்மை அவசரமாகக்கோருகிறதோ—அவ்விடமிருந்தெல்லாம் ஐக்கிய நாடுகளின் போர் வீரர்களுக்கு டீ அளிக்கும் விசேஷ குழுக்களைபற்றிய செய்திகள் வருகின்றன. யுத்தத்திலும் சரி, சமாதானகாலங்களிலும் சரி, டீ நிகரற்ற கெடுதல் இல்லாத சௌகரியமளிக்கும் பானம் என்பதை நிரூபிக்கிறது.

கடினமான காலங்களில்
இந்தியன் டீ அருந்துங்கள்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 223